## 2026ல் மீண்டும் கழக ஆட்சியை அமைக்க நாம் ஒவ்வொருவரும் உறுதியேற்போம்!

# தி.மு.க. அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்வோம்!

### மதுரவாயல் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை!






**சென்னை, ஜன.27–**

**மதுரவாயல் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில், நேற்று முன்தினம் மாலை உரையாற்றிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "2026ல் மீண்டும் கழக ஆட்சியை அமைக்க நாம் ஒவ்வொருவரும் உறுதியேற்போம்" என்றும் – "அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்வோம்" என்றும் குறிப்பிட்டார்.**

இக்கூட்டத்தில் துணை முதல்வர் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

தாய்மொழியாம் தமிழ்மொழியைக் காக்க, இந்தித் திணிப்புக்கு எதிராக உயிர்த் தியாகம் செய்த மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் பொதுக்கூட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாணவர் அணி சார்பாக இன்றைக்கு தமிழ்நாடு முழுக்க நாம் நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

நம் முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் சற்றுமுன் தன் வீரவணக்க நாள் எழுச்சி உரையைப் பேசியிருக்கிறார். அதேபோல, கழகப் பொதுச்செயலாளர் உள்ளிட்ட கழக முன்னணியினர் இன்றைக்கு தமிழ்நாடு முழுக்க வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் மதுரவாயலில் நடைபெறுகிற இந்த மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் உங்கள் மத்தியில் உரையாற்றுவதில் மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இந்த வாய்ப்பை வழங்கிய கழகத்தலைவர் அவர்களுக்கும், தலைமைக் கழகத்துக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இந்தக் கூட்டத்தைக், கிட்டத்தட்ட ஒரு மாநாடு போல மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அமைச்சர் – மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் – பகுதிக் கழகச் செயலாளர் அண்ணன் காரப்பாக்கம் கணபதி அவர்களுக்கும், அனைத்து கழக நிர்வாகிகளுக்கும், இளைஞர் அணி தம்பிமார்களுக்கும் என் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தியாகிகளை கவுரவிப்பதில் பெருமை!**

1953-ஆம் ஆண்டு நடந்த கல்லக்குடிப் போராட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு கலந்து கொண்ட 103 வயதாகும் அய்யா சதாசிவம் அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு அவரது குடும்பத்தார் கவுரவம் செய்யப்பட்டுள்ளனர். அதே போல, இந்தித் திணிப்பிற்கு எதிரான போராட்டத்தில் உயிர் நீத்த விருகம்பாக்கம் அரங்கநாதன் அவர்களுடைய மகன்களை இங்கே கவுரவித்ததில் பெருமை அடைகிறோம். நம் கழகம் என்றைக்குமே அவர்களுக்கு கழகம் என்றும் துணை நிற்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இதே இடத்தில் நடைபெற்ற பேராசிரியர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் நான் கலந்துகொண்டபோது ஒரு கோரிக்கையை வைத்தார் சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் கணபதி அவர்கள். தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் வாழ்ந்த இந்த பகுதியில் நினைவு மண்டபம் அமைக்க வேண்டும் என்பது அவரின் கோரிக்கை.

அதை இங்கு மீண்டும் நினைவுபடுத்தினார். மணிமண்டபம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும், அதற்கான கட்டுமானப் பணிகள் இன்னும் ஓரிரு மாதங்களில் தொடங்கப்பட்டு, மணிமண்டபம் விரைவில் திறக்கப்படும் என்பதையும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இது மொழிப்போர் வீரவணக்க நாள் கூட்டம் என்றாலும், தன் சட்டமன்றத் தொகுதி மக்களுக்காக பல கோரிக்கைகளை வைத்து இருக்கிறார் காரப்பாக்கம் கணபதி அவர்கள். ஒரு மினி ஸ்டேடியம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்து இருக்கிறார். நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்புதலைப் பெற்று, அந்த இடத்தைத் தேர்வு செய்து எங்களிடத்தில் ஒப்படைத்தால் நிச்சயமாக விளையாட்டு மைதானத்தை அமைத்துத் தர அனைத்து முயற்சிகளையும் விளையாட்டுத்துறை அமைச்சராக எடுப்பேன் என்ற வாக்குறுதியை இங்கு தருகிறேன்.

**ஆதிக்க இந்தியை என்றும் எதிர்ப்போம்!**

வரலாற்றில் எத்தனையோ போர்கள் நடந்திருக்கின்றன. ஆனால், அன்றைக்கும் இன்றைக்கும் தமிழ்நாட்டில் ஒரு போர் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது என்றால் அது இந்தித் திணிப்புக்கு எதிரான மொழிப்போர் மட்டும்தான். 1938-ல் பள்ளிகளில் இந்தி கட்டாயம் என்று அன்றைய முதலமைச்சராக இருந்த ராஜாஜி அவர்கள் சொன்னபோது, தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் முதல் இந்தி எதிர்ப்புப் போர் நடந்தது. தமிழறிஞர்கள், தமிழ் உணர்வாளர்கள் இந்தப் போராட்டத்தில் பெரியாருக்கு ஆதரவாகக் களமிறங்கினார்கள். மறைமலை அடிகளார், முத்தமிழ்க் காவலர் அய்யா கி.ஆ.பெ. விசுவநாதம், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் அன்றைக்குப் போராட்டக் களத்தில் குதித்தார்கள். ஆண்கள் மட்டுமல்ல, டாக்டர் தருமாம்பாள் போன்ற மகளிரும் தமிழ் மொழிப்போரில் கலந்து கொண்டார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன்னுடைய 14-ஆவது வயதில், திருவாரூர் வீதிகளில் இந்தியை எதிர்த்துதான் தன் அரசியல் வாழ்வைத் தொடங்கினார். 1948-ஆம் ஆண்டு தன் திருமணத்திற்கு ஒரு சில நிமிடம் முன்புகூட இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை தூண்டி விட்டதாகச் சொல்லி தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு கர்நாடக மாநிலத்தில் உள்ள பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார். அந்தக் காலகட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைக்கொடுமையை அனுபவித்த தாளமுத்து, நடராசன் இருவரும் சிறையிலேயே இறந்து போனார்கள்.

அவர்கள் சிறையில் இருந்தபோது, காவல்துறையினர், அப்போது இருந்த ஒன்றிய அரசு அவர்களிடம் மன்னிப்புக் கடிதம் கேட்டது. "நீங்கள் மன்னிப்புக் கடிதம் கொடுத்தீர்கள் என்றால் உங்களை விடுதலை செய்துவிடுவோம்" என்று சொன்னார்கள். ஆனால், "நாங்கள் பெரியாரின் தொண்டர்கள். இறந்தாலும் சிறையிலேயே இறப்போமே தவிர மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று சொன்னவர்கள்தான் தாளமுத்து- நடராசன்.

அத்தகைய தியாகிகளான தாளமுத்து, நடராசன் பெயரைத்தான் சென்னை சி.எம்.டி.எ (CMDA) அலுவலகக் கட்டடத்துக்கு நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சூட்டி மகிழ்ந்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்று காலை தாளமுத்து, நடராசனின் அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தைத் திறந்து வைத்தார். அங்கு காலை சென்று வீரவணக்கம் செலுத்திவிட்டுத்தான் இங்கு வந்திருக்கிறேன்.

**கழகம் கண்ட களம்!**

இதைத்தொடர்ந்து, 1964-ஆம் ஆண்டு காலகட்டத்தில் மீண்டும் இந்தி எதிர்ப்புப் போர் தொடங்கியது. இந்த முறை இந்தி எதிர்ப்புப் போரைத் தலைமையேற்று நடத்தியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

நாட்டின் அலுவல் மொழியாக இந்தி மட்டும்தான் இருக்கும் என்று ஒன்றிய அரசு சொன்னதை எதிர்த்து தமிழ்நாடெங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டத்தைத் தொடங்கியது. இலட்சக்கணக்கான மாணவர்கள், இளைஞர்கள் களத்தில் இறங்கினார்கள்.

அதே ஆண்டு, ஜனவரி 25-ஆம் தேதி திருச்சி ரயில் நிலையத்தில் கழகத்தின் தொண்டர் கீழப்பழூர் சின்னச்சாமி அவர்கள் தன் உடலில் தீ வைத்துக் கொண்டு உயிர்த்தியாகம் செய்தார். "தமிழ் வாழ்க - இந்தி ஒழிக"

என்று முழக்கமிட்டுக் கொண்டே அவர் உயிரை விட்டார். சின்னசாமி அவர்கள் இறந்தபோது அவருக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. அந்தக் குழந்தையின் பெயர் என்ன தெரியுமா? "திராவிடச்செல்வி."

கீழப்பழுர் சின்னசாமியைத் தொடர்ந்து கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன் என்று ஏராளமான தியாகிகள், நம் கழகத் தொண்டர்கள் தமிழுக்காக உயிரைக் கொடுத்தார்கள். அவங்கள் அத்தனைபேரையும், இன்றைக்கு நினைவு கூருகிறோம். அவர்கள் அத்தனை பேருக்கும் இன்றைக்கு நம் வீரவணக்கத்தைச் செலுத்திக்கொண்டு இருக்கிறோம்.

1938-ல் இந்திக்கு எதிராகப் போராடியதால், எப்படி பெரியார் சிறையிலே அடைக்கப்பட்டாரோ, அதே போல 1965-ஆம் ஆண்டு ஆதிக்க இந்திக்கு எதிராகப் போராடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். 62 நாட்கள் தனிமைச் சிறையில் நம் கலைஞர் இருந்தார். அப்போது, பாளையங்கோட்டை சிறைக்குச் சென்ற கலைஞரைச் சந்தித்த பேரறிஞர் அண்ணா, "என் தம்பி, கருணாநிதி தனிமைச் சிறையில் கிடக்கும் இந்த இடம்தான் இனி எனக்கு யாத்திரை செய்ய வேண்டிய புனித பூமி" என்று கூறினார்.

**தமிழ்மொழியே உயிர் என முழங்கிய அண்ணா!**

தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 1968, ஜூலை 18-ஆம் தேதி அப்போதைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாகாணம் - "மெட்ராஸ் பிரிசிடென்சி" என்று இருந்த நம் மாநிலத்தின் பெயரை 'தமிழ்நாடு' என்று மாற்றினார். பெயர் சூட்டும் விழாவிற்கு பேரறிஞர் அண்ணாவிற்குச் செல்ல முடியாத நிலை. அப்போது உடல்நிலை சரியில்லாததால், அவரை அந்த விழாவுக்குப் போக வேண்டாம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தினார்கள். ஆனால் "தாய்த்திருநாட்டிற்கு "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டுகிற விழாவுக்குப் போகாமல் இருந்தால் இந்த உயிர் இருந்தால் என்ன? போனால் என்ன?" என்று சொல்லி அந்த விழாவுக்குச் சென்றவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அதுமட்டுமல்ல, "தமிழ்நாடு என்று நம் மாநிலத்திற்குப் பெயர் சூட்டி இருக்கிறோம். தமிழ்நாடு எனும் பெயரை மாற்ற வேண்டும் என்று எவன் ஒருவன் நினைத்தாலும், அவன் மனதுக்குள் ஓர் பயம் பிறக்கும். அந்த பயம் இருக்கிற வரை இந்த நாட்டை அண்ணாத்துரைதான் ஆள்கிறான் என்று பொருள்" என்று அண்ணா சொன்னார். இதைச்சொல்லும்போது உங்களுக்கு என்ன நினைவுக்கு வருகிறது? இரண்டு வருடங்களுக்கு முன்பு தமிழ்நாடு என்ற பெயரை மாற்ற வேண்டும் என்று ஒருவர் சொன்னார். நான் யாரைச் சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். "தமிழ்நாடு என்ற பெயர் எனக்குப் பிடிக்கவில்லை. தமிழகம் என்று மாற்ற வேண்டும்" என்று அவர் சொன்னார். தமிழ்நாடு எங்கும் உள்ள மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், இரண்டே நாட்களில் பின் வாங்கினார். "நான் சொன்னது தவறு, மன்னித்து விடுங்கள்" என்றார். அண்ணா கூறிய அந்த பயம் இன்றைக்கும் சங்கிகளுக்கு இருக்கிறது. அண்ணா வடிவில், கலைஞர் வடிவில் நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார் என்ற பயம்தான் அது. அந்த பயத்தில்தான் அவர் பின்வாங்கினார்.

**இந்தித் திணிப்பு எதிர்ப்பு!**

பெரியார், அண்ணா காலத்தில் மட்டுமல்ல, கலைஞர் காலத்திலும் இந்தித் திணிப்புக்கு எதிரான போர்கள் தொடர்ந்தன. ஏதாவது ஒருவழியில் இந்தியைத் தமிழ்நாட்டிற்குள் திணிக்க வேண்டும் என்று சங்கிகள் முயற்சி செய்துகொண்டே இருந்தார்கள். அண்ணா மறைவுக்குப்பின் எந்த வழியாக இந்தி வந்தாலும் அதை அடித்து விரட்டியவர்தான் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

1980-களில் நவோதயா பள்ளிகள் மூலம் இந்தியைத் திணிக்கத் திட்டம் போட்டார்கள். அதை கலைஞர் கடுமையாக எதிர்த்து, இந்தித் திணிப்பை முறியடித்தார். இப்போது மீண்டும் புதிய கல்விக் கொள்கை என்று சொல்லி இந்தியைத் திணிக்கின்ற முயற்சியை ஒன்றிய அரசு செய்துகொண்டுள்ளது.

**நமது பல்கலைகளை அபகரிக்க முயற்சி!**

புதிய கல்விக் கொள்கையை நாம் ஏற்றுக்கொண்டால்தான் தமிழ்நாட்டுக்கு கல்விக்காகக் கொடுக்க வேண்டிய 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவோம் என்று ஒன்றிய அரசு கட்டளை போட்டிருக்கிறது. "குலத்தொழிலைச் செய், கடன் தருகிறேன்" என்று சொல்கிறது ஒன்றிய அரசு. அதற்காக "விஸ்வகர்மா" என்ற திட்டத்தை தமிழ்நாட்டிற்குள் நுழைக்க முயற்சிக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் கல்லூரிகளில் இந்தியைத் திணிக்க பல்கலைக்கழகங்களை அபகரிக்க முயற்சிக்கிறார்கள். அதற்காக யு.ஜி.சி (University Grants Commission) பல்கலைக்கழக மானியக்குழு விதிகளில் ஒன்றிய அரசு திருத்தம் செய்ய முயற்சி செய்கிறது. பல்கலைக்கழகங்களை உருவாக்குவது நம் மாநில அரசு. கட்டடங்களைக் கட்டுவது, கட்டமைப்புகளை உருவாக்குவது நம் மாநில அரசு. பேராசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பது மாநில அரசு. இப்படி ஒட்டுமொத்தமாக மாநில அரசால் நடத்தப்படுகின்ற தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்களை மட்டும் ஒன்றிய அரசு நியமிக்குமாம். அதற்கு என்ன காரணம்? நம் பாடத்திட்டத்தை சங்கி பாடத்திட்டமாக மாற்ற வேண்டும், எப்படியாவது இந்தியைத் திணிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் ஒரே எண்ணம். ஆனால், அதை நம் முதலமைச்சர் அவர்கள் கடுமையாக எதிர்த்துள்ளார்.

சட்டமன்றத்திலும் யு.ஜி.சி. வரைவுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு எதிராக நம் கழக மாணவர் அணி விரைவில் டெல்லியில் மிகப்பெரிய ஒரு போராட்டத்தை நடத்தும் என்று வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்.

இன்றைக்கு மட்டுமல்ல, எதிர்க்கட்சியாக இருந்தபோதும்கூட கல்வி உரிமைகளுக்காக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் நாம்தான். 'இன்ஸ்டிடியூசன் ஆஃப் எமினென்ஸ்' (Institution of Eminence) என்று சொல்லி நம் அண்ணா பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரித்து, அதில் ஒன்றை அபகரிக்கின்ற வேலையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு முற்பட்டது. அப்போது ஆளுங்கட்சியாக இருந்த அ.தி.மு.க. அரசு, அதற்கு அடிபணிந்தது. அண்ணா பல்கலைக்கழக உரிமைகள் பறிபோவதை வேடிக்கை பார்த்துகொண்டு இருந்தார்கள். ஆனால் எதிர்க்கட்சியாக இருந்த நாம், நம்முடைய தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில் அண்ணா பல்கலைக்கழக வாசலிலேயே கழக இளைஞர் அணி சார்பில் மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுத்தோம். அந்தப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாக, அண்ணா பல்கலைக்கழகத்தை பிரிக்கின்ற முயற்சியை அன்றைக்கு ஒன்றிய அரசு கைவிட்டது. இன்றும் அத்தகைய வலிமைமிக்க போராட்டத்தை நாம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறோம். அதற்குச் சிறந்த உதாரணம், சமீபத்தில் மதுரை அரிட்டாப்பட்டி டங்ஸ்டன் சுரங்க விவகாரம். ஒன்றிய அரசின் இத்திட்டத்திற்கு நம் கனிமவளத்துறை அமைச்சர் கடும் எதிர்ப்புத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினார். இருந்தாலும் எப்படியும் அந்த 'டங்ஸ்டன்' நிறுவனத்தைக் கொண்டு வருவோம் என்று ஒன்றிய அரசு ஒற்றைக் காலில் பிடிவாதம் பிடித்தது. அப்பகுதி மக்கள் போராட்டம் செய்தார்கள். மக்களின் எதிர்ப்பு இருப்பதால் எக்காரணம்கொண்டும், டங்ஸ்டன் கம்பெனி மதுரையில் வராது என்ற உறுதிமொழியை நம் முதலமைச்சர் கொடுத்தார்.

மக்கள் மன்றத்தில் மட்டுமல்ல; சட்டமன்றத்திலும் டங்க்ஸ்டன் சுரங்கத்துக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வந்தார். "திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கின்ற வரை நான் முதலமைச்சராக இருக்கின்ற வரை தமிழ்நாட்டுக்குள் டங்க்ஸ்டன் திட்டம் வராது" என்று உறுதி அளித்தார். இன்றைக்கு அந்தத் திட்டத்தை ஒன்றிய அரசு ரத்து செய்து இருக்கிறது என்றால், அதற்கு நம் முதலமைச்சர் அவர்களும், அரிட்டாப்பட்டி மக்கள் காட்டிய மன உறுதிதான் காரணம். இன்று அந்த கிராம மக்கள் அனைவரும் நம் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்துவிட்டுச் சென்று இருக்கிறார்கள். ஆகவே, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்க களத்தில் இறங்கிப் போராடுகின்ற ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான். அதனால்தான், இன்றைக்கு தமிழ்நாட்டுக்குள் இந்தித் திணிப்பு உட்பட ஒன்றிய அரசின் எந்தத் திட்டமும் நுழைய முடியவில்லை.

தமிழை ஒழிக்க வேண்டும் என்ற அவர்களின் முயற்சி இன்றைக்கும் தொடர்கிறது. அதனால்தான், வள்ளுவரையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை, வள்ளலாரையும் விட்டு வைக்கவில்லை. வள்ளுவரையும், வள்ளலாரையும் களவாட ஒரு கும்பல் முயற்சி செய்கிறது.

சட்டமன்றத்திற்குள் ஆளுநர் அவர்கள் வருகிறார். வரலாற்றிலேயே ஒரு ஆளுநர் சட்டமன்றத்திற்குள் வாக்கிங்கிற்காக வந்து செல்கின்ற ஒரே ஆளுநர் இங்கு இருக்கின்ற ஆளுநர் அவர்கள்தான். நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இங்கு இருக்கின்ற ஆளுநர் அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரா? கிடையாது. ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டவர். கிட்டத்தட்ட ஒரு தபால்காரர்; அவ்வளவுதான். நம் முதலமைச்சர் சொல்வதை ஒன்றிய அரசிடம் சொல்வது, ஒன்றிய அரசு சொல்வதை நம் முதலமைச்சரிடம் சொல்வதுதான் அவரின் வேலை.

ஆளுநர் உரை என்பது வெறும் பேருக்குதான். முதலமைச்சர் என்ன எழுதிக் கொடுக்கிறாரோ அதைப் படிக்க வேண்டியதுதான் ஆளுநரின் வேலை. சட்டமன்றத்தில் பெரியாரின் பெயரைத் தவிர்த்து விடுகிறார், அம்பேத்கர் பெயரைத் தவிர்த்து விடுகிறார், பேரறிஞர் அண்ணாவின் பெயர், கலைஞரின் பெயரைத் தவிர்த்து விடுகிறார். சமீபத்தில் இந்த முறை என்ன காரணம் சொல்லிவிட்டு வெளிநடப்புச் செய்தார் தெரியுமா? "சட்டமன்றத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து பாடக்கூடாது. தேசியகீதம்தான் பாட வேண்டும்" என்று சொல்கிறார். அவருக்குத் தெரியவில்லை. இங்கு தமிழ்நாட்டு மக்களுக்கு தேசிய கீதமும் முக்கியம், அதே அளவுக்கு எங்கள் "தமிழ்த் தாய்" வாழ்த்தும் எங்களுக்கு முக்கியம். அதனால்தான் நம் கழகத் தலைவர் அவர்கள் நேற்றுக்கூட ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது சொன்னார்; ஆளுநரை பிரதமர் மோடி அவர்களுக்கும், உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களுக்கும் நம் முதலமைச்சர் அவர்கள் ஒரு வேண்டுகோள் வைத்தார். என்ன வேண்டுகோள் தெரியுமா அது.? "தயவுசெய்து இங்கு இருக்கின்ற ஆளுநரை மாற்றி விடாதீர்கள். வருகின்ற சட்டமன்ற தேர்தல் வரைக்காவது ஆளுநர் இங்கு இருக்கட்டும் என்று கூறினார். ஆளுநர் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யத்தான் பாசிஸ்ட்டுகள் தமிழ்நாட்டு மக்களிடம் அம்பலப்பட்டு இருக்கிறார்கள். நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் நடந்து கொண்டு இருக்கிறது. ஒன்றிய அரசின் அடாவடித்தனம் அளவுக்கு மீறிப் போய்க்கொண்டு இருக்கிறது. ஆனால், இது எதைப்பற்றியுமே கவலைப்படாமல், ஒருத்தர் தமிழ்நாட்டில் இருக்கிறார். அவரின் குறிக்கோள் எல்லாம், அவரின் வருத்தம் எல்லாம், அவரின் எண்ணம் எல்லாம் ஒன்றே ஒன்றுதான். எப்போது அடுத்த அமாவாசை வரும் என்று ஒவ்வொரு இடத்திலும் சொல்லிக்கொண்டு இருக்கிறார். "இன்னும் 13 அமாவாசைகள்தான் இருக்கிறது, இன்னும் 14 அமாவாசைகள்தான் இருக்கிறது" என்று!

நாமெல்லாம் காலண்டரில் பொதுவாக தேதி பார்ப்போம். ஆனால் காலண்டரில் என்றைக்கு அமாவாசை வரும் என்று பார்க்கும் ஒவே ஆள் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் மட்டும்தான். ஏனென்றால், அமாவாசைகளுக்குதான் எப்போதும் அமாவாசையைப் பற்றி கவலை இருக்கும்.

**பத்து தோல்வி பழனிச்சாமி!**

10 நாட்களுக்கு முன்பு அவரின் சம்பந்தி வீட்டில் ஐ.டி ரைடு நடந்தது. கிட்டத்தட்ட 750 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு நடந்து இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். என்றைக்கு ரைடு போனார்களோ, அன்றைக்கே சொன்னேன். நிச்சயமாக வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க - பாஜக கூட்டணி உறுதி. அதற்காக நடத்தப்பட்டதுதான் அந்த ரைடு.

இரண்டு நாட்களுக்கு முன்பு பத்திரிக்கையாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு கேட்கிறார்கள். அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி சட்டமன்றத்தில் வருமா? வராதா என்று. ஒரு எதிர்க்கட்சித் தலைவர் என்ன பதில் சொல்ல வேண்டும்? எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்கிறார் தெரியுமா? இதுக்கெல்லாம் பதில் சொல்வதற்கு எனக்கு பவர் இல்லை என்று ஒரு கட்சியின் தலைவர் சொல்கிறார். பா.ஜ.க என்றால் அந்த அளவுக்கு எடப்பாடி பழனிசாமிக்கு பயம். இவ்வளவு நாள் பத்து தோல்வி பழனிச்சாமியாக இருந்தவர் இன்றைக்கு பவரில்லா பழனிச்சாமியாக மாறி இருக்கிறார். தன் சொந்த கட்சி அ.தி.மு.க.வையே காப்பாற்ற முடியாமல் தவிப்பவர்தான் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள்.

ஆனால். ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டையும் காப்பாற்றுவதற்காக நம் முதலமைச்சர் அவர்கள் தினமும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அ.தி.மு.க.வின் கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் தமிழ்நாடு சீரழிந்து போயிருந்தது. ஆனால், தமிழ்நாட்டை நம் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குத் தூக்கி நிறுத்தி இருக்கிறார்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டம். மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, புதுமைப் பெண் திட்டம், "தமிழ்ப்புதல்வதன்" திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம், "நம்மை காக்கும் 48" திட்டம், எல்லாவற்றிற்கும்மேல் மகுடமாக ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற மகளிர் உரிமைத் தொகை திட்டம்.

ஆகவே, நமது முதலமைச்சர் அவர்களுக்கு நாம் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும். இன்றைக்கு நம் திராவிட இயக்கத்தை ஒழிப்போம் – குழி தோண்டிப் புதைப்போம் என்று நிறைய பேரு கனவு கண்டுகொண்டு சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நான் ஒரேயொரு பதிலைக் கூற விரும்புகிறேன்.

1940-களிலேயே பேரறிஞர் அண்ணா அவர்கள் இதற்கு ஒரு பதில் சொல்லி இருக்கிறார். அந்த பதிலை மட்டும் இங்கு கூறிக்கொண்டு முடிக்க விரும்புகிறேன். நாங்கள் 4 அடி உயரம் இருப்பதாக நினைத்துக் கொண்டு, எங்களைப் புதைக்க நீங்கள் 4 அடிக்கு குழி வெட்டுவீர்கள். நீங்கள் அந்தக் குழியை வெட்டி முடிப்பதற்குள் நாங்கள் 6 அடி வளர்ந்திருப்போம். உடனே, நீங்கள் 6 அடிக்கு குழியை வெட்டுவீர்கள். அதற்குள்ளாக, நாங்கள் மேலும் 2 அடி வளர்ந்திருப்போம். இப்படியே நீங்கள் காலம் முழுவதும் குழி வெட்டிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். காரணம், நாங்கள் எப்போதுமே வளர்ந்து கொண்டே இருப்போம்.

"எங்கள் இயக்கத்தைப் புதைக்கிற அளவுக்கு உங்களால் குழிவெட்டவே முடியாது", என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். எனவே, பாசிசக் கூட்டத்திற்கும், அவர்களின் அடிமைக் கூட்டத்திற்கும், வாடகை வாய்களுக்கும் அண்ணா சொன்ன அதே பதிலை நானும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எங்களை வீழ்த்த வேண்டும் என்று நீங்கள் எவ்வளவு முயன்றாலும் குழி வெட்டினாலும், தி.மு.கழகத்தை உங்களால் தொட்டுக்கூடப் பார்க்க முடியாது. ஏனென்றால் எங்கள் தலைவர் தலைமையில் தினமும் நாங்கள் வளர்ந்து கொண்டேதான் இருப்போம்.

**தமிழ்நாட்டைக் காக்க - வீட்டுக்கு ஒரு பிள்ளை!**

மொழிப்போராட்டம் நடந்தபோது, "தமிழ்மொழியைக் காக்க வீட்டுக்கு ஒரு பிள்ளை தேவை" என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். இப்போது, பாசிஸ்ட்டுகளிடம் இருந்து அடிமைகளிடம் இருந்து தமிழ்நாட்டைக் காக்க,வீட்டுக்கு ஒரு பிள்ளை தி.மு.க.வில் இணைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அந்த முயற்சியில் நீங்கள் அத்தனை பேரும் ஈடுபட வேண்டும்.

அப்படி கழகத்தில் இணைந்து 2026-ல் மீண்டும் கழக ஆட்சியை அமைக்க நாம் ஒவ்வொருவரும் உறுதியேற்போம்! அரசின் சாதனைகளை மக்களிடத்தில் எடுத்துச் செல்ல வேண்டும் என்று உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

2026-ல் வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு! என்பதை மனதில் ஏந்தி இன்றிலிருந்து நாம் ஒவ்வொரு நமது தேர்தல் பணியில் ஈடுபடுவோம்.

தமிழ் வெல்க! தமிழ்நாடு வாழ்க மொழிப்போர்த் தியாகிகளின் புகழ் ஓங்கட்டும். அவர்களின் தியாகத்தைப் போற்றுவோம். மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம், வீரவணக்கம், வீரவணக்கம் என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.

கழகப் பொருளாளர் மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, அமைச்சர் மா.சுப்பிரமணியன், பகுதி கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் கணபதி, பகுதிக்கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜா, மாநகர துணை மேயர் மகேஷ்குமார், பகுதிக் கழகச் செயலாளர், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் ராஜன், ஒன்றியச் செயலாளர் வீரமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் தனசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அருணாச்சலம், பாலவாக்கம் சோமு, வேளச்சேரி மணிமாறன், பகுதிக் கழகச் செயலாளர்கள் மற்றும் மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்களுமான பெருங்குடி ரவிச்சந்திரன், எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், வி.மதியழகன், பகுதிக் கழகச் செயலாளர்கள் சு.சேகர், துரை கபிலன், கே.கண்ணன், மு.ராஜா, ஒன்றிய கழகச் செயலாளர் வெங்கடேசன், மதுரவாயல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பாண்டிச்செல்வம், கழக ஐ.டி விங் அணியின் மாநில துணைச் செயலாளர் பத்மபிரியா, முத்தமிழறிஞர் கலைஞரோடு கல்லக்குடி போராட்டத்தில் கலந்து கொண்ட பெரியவர் சதாசிவம், மொழிப்போர் தியாகி விருகம்பாக்கம் அரங்கநாதன் அவர்களின் மகன்கள் அமுதவாணன், ரவிச்சந்திரன், அன்பழகன், அரங்கநாதன் அவர்களின் பேரன் மாவட்ட பிரதிநிதி விருகை எழில்வாணன், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வக்குமார், துரை கனிமொழி, மாவட்ட கழக நிர்வாகிகள் குணசேகரன், பாலவாக்கம் விஸ்வநாதன், பாலவாக்கம் மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி பாஸ்கர், மகளிர் அணியின் சமூக வலைத்தள துணைச் செயலாளர் ரத்னா லோகேஸ்வரன், மாவட்ட அமைப்பாளர் அருண்குமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் சங்கர் கணேஷ், விநாயகமூர்த்தி, ரவி, எழில் பாண்டியன், தியாகராஜன், கிருஷ்ணகுமார், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் நரேன் கணபதி, நவராஜ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வினோத், வட்ட கழகச் செயலாளர் சுந்தர், மாமன்ற உறுப்பினர் ஹேமலதா கணபதி உள்ளிட்ட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.